ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த

# ॥ அங்கண் நெடுமதிள் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அங்கண் நெடுமதிள் ॥

தில்லைநகர்த் திருச்சித்திர கூடத்தில்
தொல்லிராமனாய்த் தோன்றிய கதைமுறை

‡அங்கணெடு மதிள் புடை சூழ் அயோத்தி என்னும்⋆
அணி நகரத்துலகனைத்தும் விளக்கும் சோதி⋆
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி⋆
விண் முழுதும் உயக் கொண்ட வீரன் தன்னைச்⋆
செங்கண் நெடுங்கரு முகிலை இராமன் தன்னைத்⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்⋆
எங்கள் தனி முதல்வனை எம் பெருமான் தன்னை⋆
என்று கொலோ கண் குளிரக் காணும் நாளே (1)

வந்தெதிர்ந்த தாடகை தன் உரத்தைக் கீறி⋆
வரு குருதி பொழி தரவன் கணை ஒன்றேவி⋆
மந்திரம் கொள் மறை முனிவன் வேள்வி காத்து⋆
வல் அரக்கர் உயிர் உண்ட மைந்தன் காண்மின்⋆
செந்தளிர்வாய் மலர் நகை சேர் செழுந் தண் சோலைத்⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்⋆
அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த⋆
அணி மணி ஆசனத்திருந்த அம்மான் தானே (2)

செவ்வரிநற் கரு நெடுங்கண் சீதைக் காகிச்⋆
சின விடையோன் சிலை இறுத்து மழு வாள் ஏந்தி⋆
வெவ்வரிநற் சிலைவாங்கி வென்றி கொண்டு⋆
வேல் வேந்தர் பகை தடிந்த வீரன் தன்னை⋆
தெவ்வர் அஞ்சு நெடும் புரிசை உயர்ந்த பாங்கர்த்⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்⋆
எவ்வரிவெம் சிலைத் தடக்கை இராமன் தன்னை⋆
இறைஞ்சுவார் இணை அடியே இறைஞ்சினேனே (3)

www.prapatti.com

தொத்தலர் பூஞ்சுரி குழல் கைகேசி சொல்லால்⋆
    தொன்னகரம் துறந்து துறைக் கங்கை தன்னை⋆
பத்தி உடைக் குகன் கடத்த வனம் போய்ப் புக்குப்⋆
    பரதனுக்கு பாதுகமும் அரசும் ஈந்து⋆
சித்திரகூடத்திருந்தான் தன்னை⋆ இன்று
    தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்⋆
எத்தனையும் கண் குளிரக் காணப் பெற்ற⋆
    இரு நிலத்தார்க்கிமையவர் நேர் ஒவ்வார் தாமே (4)

வலி வணக்கு வரை நெடுந் தோள் விராதைக் கொன்று⋆
    வண் தமிழ் மா முனி கொடுத்த வரி வில் வாங்கி⋆
கலை வணக்கு நோக்கரக்கி மூக்கை நீக்கிக்⋆
    கரனோடு தூடணன் தன் உயிரை வாங்கி⋆
சிலை வணக்கி மான் மரிய எய்தான் தன்னைத்⋆
    தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்⋆
தலை வணக்கிக் கை கூப்பி ஏத்த வல்லார்⋆
    திரிதலால் தவம் உடைத்துத் தரணி தானே (5)

தன மருவு வைதேகி பிரியல் உற்றுத்⋆
    தளர்வெய்திச் சடாயுவை வைகுந்தத்தேற்றி⋆
வன மருவு கவி அரசன் காதல் கொண்டு⋆
    வாலியைக் கொன்றிலங்கை நகர் அரக்கர் கோமான்⋆
சினம் அடங்க மாருதியால் சுடுவித்தானைத்⋆
    தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்⋆
இனிதமர்ந்த அம்மானை இராமன் தன்னை⋆
    ஏத்துவார் இணை அடியே ஏத்தினேனே (6)

குரை கடலை அடல் அம்பால் மறுக வெய்து⋆
    குலை கட்டி மறுகரையை அதனால் ஏறி⋆
எரி நெடு வேல் அரக்கரொடும் இலங்கை வேந்தன்⋆
    இன்னுயிர் கொண்டவன் தம்பிக்கரசும் ஈந்து⋆
திருமகளோடினிதமர்ந்த செல்வன் தன்னைத்⋆
    தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்⋆

www.prapatti.com

அரசமர்ந்தான் அடி சூடும் அரசை அல்லால்⋆
    அரசாக எண்ணேன் மற்றரசு தானே (7)

அம்பொனெடு மணி மாட அயோத்தி எய்தி⋆
    அரசெய்தி அகத்தியன்வாய்த் தான் முன் கொன்றான்
தன்⋆ பெருந் தொல் கதைக் கேட்டு மிதிலைச் செல்வி⋆
    உலகுய்யத் திரு வயிறு வாய்த்த மக்கள்⋆
செம் பவளத் திரள் வாய்த் தன் சரிதை கேட்டான்⋆
    தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்⋆
எம் பெருமான் தன் சரிதை செவியால் கண்ணால்
    பருகுவோம்⋆ இன் அமுதம் மதியோம் இன்றே (8)

செறி தவச் சம்புகன் தன்னைச் சென்று கொன்று⋆
    செழு மறையோன் உயிர் மீட்டுத் தவத்தோன் ஈந்த⋆
நிறை மணிப் பூண் அணியும் கொண்டிலவணன் தன்னைத்⋆
    தம்பியால் வான் ஏற்றி முனிவன் வேண்ட⋆
திறல் விளங்கும் இலக்குமனைப் பிரிந்தான் தன்னைத்⋆
    தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
உறைவானை⋆ மறவாத உள்ளந் தன்னை
    உடையோம்⋆ மற்றுறு துயரம் அடையோம் இன்றே (9)

‡அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி⋆
    அடல் அரவப் பகை ஏறி அசுரர் தம்மை
வென்று⋆ இலங்கு மணி நெடுந் தோள் நான்கும் தோன்ற⋆
    விண் முழுதும் எதிர்வரத் தன் தாமம் மேவி⋆
சென்றினிது வீற்றிருந்த அம்மான் தன்னைத்⋆
    தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்⋆
என்றும் நின்றான் அவன் இவன் என்றேத்தி⋆ நாளும்
    இறைஞ்சுமினோ எப்பொழுதும் தொண்டீர் நீரே (10)

‡தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்⋆
    திறல் விளங்கு மாருதியோடமர்ந்தான் தன்னை⋆
எல்லை இல் சீர்த் தயரதன் தன் மகனாய்த் தோன்றிற்-
    றது முதலாத்⋆ தன் உலகம் புக்கதீறா⋆

கொல் இயலும் படைத் தானைக் கொற்ற ஒள்வாள்⋆
    கோழியர் கோன் குடைக் குலசேகரன் சொற் செய்த⋆
நல் இயல் இன் தமிழ் மாலை பத்தும் வல்லார்⋆
    நலந் திகழ் நாரணன் அடிக் கீழ் நண்ணுவாரே (11)

‖ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com